உ

வினாவிடை மணிமாலை



சநாதன தரும வித்யாலய முதலாவது வெளியீடு.

சி. சுப்பையா சர்மா

பதிப்பாளர்.

க. வீ. சொ. வீ. அழகப்பையா.

1943.

உ

ஸ்ரீகணேசாயநம.

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய சுவாமிகள் அருளிச் செய்த

வினாவிடை மணிமாலை

கோட்டையூர்

க. வீ. சொ. வீ. சநாதன தரும வித்யாலயத்தின்

முதலாவது வெளியீடு

இது

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரஞான தேசிக சுவாமிகள்

மாணாக்கர்

சி. சுப்பைய சுவாமிகளால்

மொழிபெயர்க்கப்பெற்று

கோட்டையூர்

திருவாளர், க. வீ. சொ. வீ.

அழகப்பையா அவர்களால்

காரைக்குடி செட்டிநாடு பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

சுபாநு௵ வைகாசி௴ ஜூலை௴

1943

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]


[illegible]

[illegible]

[illegible]



க. வீ. சொ. வீ. அழகப்பையா அவர்கள் கோட்டையூர்.



முகவுரை.

அறிவாற் பெரிய ஆன்றோர்களே! இந்திரன் முதலிய இறையவர் பதங்களையும் அந்தமில்லாத இன்பத்தையுடைய அழிவில்லாத வீட்டினையும் அடைதற்குரிய மாந்தர்க்கு அடையப் பெறுவனவாக உயர்ந்தோர்கள் கண்டபொருள் நான்கு அவை அறம், பொருள், இன்பம், வீடு, என்பன. அவற்றுள் வீட்டையடைந்தோர்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்களுள்வாராமையால் வீடே முக்கியபுருஷார்த்தம். ஏனைய மூன்றனுள் அறம், இம்மை மறுமைப்பயனைக் கொடுத்தழிவதானும், பொருள், புண்ணியத்தையும் போகத்தையுங் கொடுத்தழிவதானும், இன்பம், புண்ணியத்தின் பயனாய் இந்திரியார்த்தங்களின் சம்பந்தத்தாற்றோன்றி அது சிற்றின்பமா யழிதலானும் இவை அமுக்கியப் புருஷார்த்தங்கள். வீட்டைக்கூறும் பிரம சூத்திர முதலிய வேதாந்த நூல்கள் வீட்டின் சாதனமான சிரவணாதிகளைக் கூறுகின்றன கருமகாண்ட சுருதிகள், அந்தச் சிரவணாதிகளுக்குச் சாதனமானமனத் தூய்மையின் பொருட்டும், இம்மை மறுமைப் போகங்களின் பொருட்டும் எல்லா வருணத்தார்களுக்கும் கலியுகத்தில் தானமொன்றனையே முக்கிய தருமாநுஷ்டானமாகக் கூறுகின்றன. ஈண்டு பயனை விரும்பாது செய்யுந் தானம் சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியாகிய மோக்ஷத்துக்குங் காரணமாதலின் முக்கியமாயிற்று. இதனை "தானமேகம் கலௌ யுகே" என்னுமிருதியானும் "அறத்தால் வருவதே இன்பம்" "அறத்தினூஉங்காக்கமுமில்லை" "மேலுலக மில்லெனினு

இத்தானங்கள் முப்பத்திரண்டும் பதிதானம் பசு தானம் என இருவகைப்படும். பதிதானம், சிவ விஷ்ணு வாதி ஆலயங்களை இயற்றுதலும் அவற்றின் நித்திய நைமித்தியாதி பூசைஉத்ஸவாதிகளை நடத்துதலுமாம். பசு தானம், தொடர்பு பற்றுது சீவான் மாக்களனைவருக்கும் அன்னவஸ்திராதிகளை உதவுவது. இதனை "வறியார்க்கொன் றீவதே யீகை" என்றார். எல்லாத்தானங்களிலுஞ் அன்ன தானமே வித்யா தானமென்னு இருதானங்களே சிறந்தன. இவற்றில்; சிறிதுநாழிகையில் சீரணமாகும் அன்னத்தா லுண்டாம் மகிழ்வினும் சீவனகாலம்வரை அழியாத மகிழ்வைத்தரும் வித்தையின் தானமே மிக மேலானது. இவ்வித்தை, பரவித்தை அபரவித்தை என இருவகைப்படும். பரவித்தை, குரு ஈசுவரானுக்கிரகத்தால் தன்னைப் பேரா னந்தப் பெருவாழ்வில்கண்டு மகிழ்வது. அபரவித்தை, ஆகமமாதி நூல்களைச் சத்குருசந்நிதியில் ஓதுவது. இந்த அபரவித்தை, பரவித்தைக்கும் புண்ணியானுஷ்டானவழி யாக இம்மை மறுமைப்பயனுக்கும் காரணமாகின்றது. இதனால் பிறந்ததுமுதல் இறுதிக்காலம்வரை உலகில்வாழ வேண்டியவைகளைத் தெரிந்துகொள்வதுதான் வித்தை யென்பதாயிற்று. இதனை "வித்யா ததாதி விநயம் விநயாத் யாதி பாத்ரதாம், பாத்ரத்வாத் தநமாப்நோதி தநாத் தர்மம் தத: ஸுகம்" என்பதானும் "அடக்கம் அமரருளுய்க்கும் அடங்காமை ஆரிருளுய்த்துவிடும்" என்பதானு முணர்க. இவ்வாறு படிக்க அதனால் அடங்க அதனால் பாத்திரமாக அதனால் பணம்பெற அதனால் அறம்பெற அதனால் சுகம் பெறக் கல்வி காரணமாம். இவ்வாறிருக்க

சமயகுரவர்கள், ஔவையார், திருவள்ளுவர் முதலிய மூதறிஞர்கள் அருளிய அமிர்தம் பொழியுஞ்சாதன நூல்

களை இக்காலத்துச் சில நவீன நாகரீகம் பழகுமிளைஞர்கள்
கல்லாமல் நூலென யாதோவொன்றை ஓதிவிட்டுத்
தள்ளவேண்டியவற்றையுங் கொள்ளவேண்டியவற்றையுந்
தருமாதருமங்களின் சொரூபத்தையுஞ் செவ்வனே யுண
ராது, தம் மனத்தின் எண்ணங்களையே பிரமாணமெனக்
கொண்டு அதன் வழியே சென்று உயிரையோம்பாது
ஊனுடலை மட்டிலும் ஓம்பிப்பழியாயிரஞ் செய்துழல்கின்ற
னர். அந்தோ! இவர் இருமைப்பயனுமிழப்பது பரிதாபம்!
பரிதாபம்!.

இவர்கள் வழியில் நம் பாலர்கள் அந்த கோலாங்கூல
நியாயப்படி போய்விடாமல் சநாதன தருமவழியில் நடத்
தம் பொருட்டு விக்கிரம-ஞு ஆவணி-மீ 31உ 1940ஞு
செப்டம்பர்-மீ 15-உ கோட்டையூரில் சுமார் அறுபத்
தையாயிரம் ரூபா பெறுமான பூர்வீகமான சொந்த
கிருகத்திற்குச் சநாதன தரும வித்தியாலயம் என்று பெய
ரிட்டு அதில் ஆறுபாத்தியாயர்களை வைத்து ஆறு வகுப்பு
களை வகுத்து நூற்றிருபது மாணவ மாணவிகளைச் சேர்த்து
அவர்களுக்கு முதலில் "ஹரிஓம் நன்றாக குருவாழ்க
குருவே துணை" என்று காப்பு தொடங்கும் அரிச்சுவடிமுதல்
வேழமுகம், உலகநீதி, நமச்சிவாய மாலை, ஆத்திசூடி,
கொன்றைவேந்தன், அருணகிரியந்தாதி, வெற்றிவேற்கை,
மூதுரை, நல்வழி, நன்னெறி, விவேக சிந்தாமணி, சைவ
வினாவிடை, ஒன்று முதல் நான்குவரை நாவலர் பால
பாடங்கள், இலக்கண வினாவிடை, தேவாரம், திருவாசகம்,
திருப்புகழ், சங்கீதம், சம்ஸ்கிருதம், கணிதம், பூகோ
ளம், ஆங்கிலம், தேசச் சரித்திரம், சைன்ஸ், அரசியல்
விளக்கம், முதலிய நீதியும் பக்தியும் உலக நடையும் செவ்
வனே யுணரக்கூடிய சநாதன நூல்களைக்கொண்டு இலவச
மாக அறிவை ...

கற்பலகை புஸ்தகம் முதலியவற்றையுமுதவுகின்றோம். இதில் நூல் நிலயம் அமைக்கப்பெற்றுள்ளது. இவ்வித்யாசாலைக்கு அரசாங்கத்து இலவசதனம் பெறுவதில்லை. இவ்வித்யா சாலை கிருகத்தையும்; இவ்வித்யாசாலை தடையின்றி நீடூழி காலம் நடந்துவரும் பொருட்டு மூலதனமாகத் தென்னார்க் காடு ஜில்லா வயலாம்பூர் கிராமத்தில் சொந்தமான சுமார் முப்பத்தையாயிர ரூபா பெறுமான எழுபது ஏக்கர் நஞ்சை நிலத்தையும்; தானசாசனம் எழுதி ரிஜிஸ்தர் செய்து அதன் மேல் வருமானத்தைக் கொண்டு நடத்திவருகிறோம். இவ் வித்யா சாலையில் பிரதி-வருஷ ஆவணி-மீ நடைபெறும் ஆண்டு விழாவில் தக்கதலைவர்கள் முன்னிலையில் மாணவ மாணவிகளால் சொற்பொழிவு, கோலாட்டம், கும்மி, ஆடல், பாடல் முதலியவற்றை நடத்துகிறோம் அப்போது ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய சுவாமிகள் அருளிச்செய்த பிரசிநோத்ர ரத்நமாலிகா என்னும் வினவிடை மணிமாலை, நீதியும் ஞானமும் நிறையப்பெற்று எளிதில் நல்லறிவு மாணவர்களுக்கும் ஏனையோர்களுக்கு முண்டாகும்படி இருப்பதால் அதனையும் வினவிடையாகச் சொற்பொழி வாற்றவேண்டி அதனை மொழிபெயர்த்துத் தரவேண்டு மென்று ஸ்ரீமத் சிதம்பரஞான தேசிக சுவாமி அவர்களின் மாணாக்கரான ஸ்ரீமத் சி. சுப்பையா சுவாமிகளைக் கேட்டுக் கொண்டதற் கிணங்கி அவர்கள் அவ்வாறே எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்துக் கொடுக்க அதனை அச்சிட் டிருக்கின்றோம். கடவுள் காத்தருளுவாராக.

இங்ஙனம்,

க. வீ. செ. வீ. அழகப்பையா,

கோட்டையூர்.

உ

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ சங்கர பகவத் பூஜ்ய பாதாசார்ய சுவாமிகள்

அருளிச்செய்த

வினவிடை மணிமாலை.

காப்பு.

மன்றத்தானைக்குருவாய் மன்னுஞ் சிதம்பரனை
யென்று மிறைஞ்சிநின் றேத்தியே-துன்றுசுவைத்
தண்டமிழிற் சொல்லுவேன் தக்கவினு விடையாக
கொண்டமணி மாலை குறித்து.

வினு, விடை

1. சுவாமி! கொள்ளவேண்டியது யாது?
குருவின் வாக்கியம்.

2. தள்ளவேண்டியது யாது?
கெட்ட காரியம்

3. குரு யார்?
தத்துவ ஞானியும், சீடரது நன்மையில் எப்போதும் முயற்சியுடையவருந் தான்.

4. அறிவாளியால் விரைவில் செய்யவேண்டியது யாது?
சம்சாரத் தொடக் கறுத்தல்.

5. மோக்ஷமாகிற மரத்துக்கு வித்து யாது?
கன்மமன்று; நல்ல ஞானம்.

6. சுத்தன் யார்?
மனத் தூய்மை யுடையவன்.

7. பண்டிதன் யார்?
பகுத்தறி வுடையவன்.

8. விஷம் யாது?
பெரியோரை அவமதித்தல்.

9. சம்சாரத்தில் சாரம் யாது?
பலவிதஞ் சிந்திக்குஞ் சஞ்சலந்தான்.

10. மனிதப் பிறப்பினுள் எது உண்மை யுணர்ந்தது?
தனதும் பிறரதுமான நன்மையில் முயற்சிசெய்யும் பிறவி.

11. கள்ளைப்போல் மயக்குளது யாது?
சிநேக மென்னும் பற்று.

12. திருடர் யார்?
சுத்த முதலிய பஞ்ச விஷயங்கள்.

13. பிறவிக் கொடியாது?
ஆசை.

14. விரோதி யாது?
முயற்சியின்றி யிருத்தல் (மடி)

15. எதனின்றும் பயமுண்டாகின்றது?
மரணத்தினின்று.

16. குருடனினுங் குருடன் எவன்?
இராகமுள்ளவன்.
17. சூரன் யார்?
மாதரின் கண்ணம்புகளால் துன்பமடையாதவன்.
18. அமுதம் போல செவிகளால் குடிக்கத்தக்கது யாது?
சாதுக்களின் உபதேசம்.
19. பெருந்தன்மைக்குக் [illegible]?
ஒன்றையும் இரவாமை.
20. அளக்க முடியாத ஆழ் [illegible]
மாதர் நடை.

21. கெட்டிக்காரன் யார்?
பெண்களால் தண்டிக்கப்படாதவன்.
22. வறுமை யாது?
மனத்திருப்தி யில்லாமை.
23. எளிமை யாது?
தாழ்ந்தவர் பாலிறத்தல்.
24. ஜீவனம் யாது?
குற்றமில்லாத நடை.
25. ஜடம் யாது?
படித்த பாடத்தை அடிக்கடி படியாமை.
26. விழிப்புள்ளவன் எவன்?
ஆராய்ச்சியுள்ளவனே.
27. தூக்கம் யாது?
அறியாமை.

28. தாமரையிலை நீர்போல் நிலையில்லாதவை யாவை?
இளமை, செல்வம், ஆயுள் என்பவை.

29. நிலவின் ஒளிபோல் இன்பஞ் செய்பவர் யார்?
சாதுக்கள்.

30. நரகம் யாது?
அன்னியன் வயப்படுதல்.

31. சுகமுடைமை யாது?
சர்வசங்க பரித்தியாகம்.

32. சம்பாதிக்கத்தக்கது யாது?
ஜீவர்களுக்கு நன்மையைத் தேடல்.

33. ஜீவர்களுக்குப் பயம் எதில்?
பிராணனிடத்தில்.

34. கெட்ட பயன் தருவது யாது?
நன்மையற்ற மானம்.

35. இன்பமளிப்பது யாது?
சாதுக்களிடம் மித்திரபாவனை.

36. சகல துன்ப நாசத்தில் சமர்த்தன் யார்?
எவ்வாற்றானுந் துறந்தவன்.

37. மரணம் யாது?
மூடத் தன்மை.

38. விலையற்றது எது?
சமயத்திற் கொடுத்த கொடை.

39. மரணம்வரை துன்பஞ் செய்வது யாது?
மறைவிற் செய்த பாவம்.

40. முயற்சி செய்யவேண்டியது எவற்றில்?
கல்வி, நல்லமருந்து, கொடை என்னுமிவற்றில்.

41. எவற்றில் பராமுகமாக இருக்கவேண்டும்?
கீழ்மக்கள் பரதார மென்பவற்றில்.

42. அல்லும் பகலுஞ் சிந்திக்கத்தக்கது எது?
சம்சார சாரமின்மையே மாதரை யன்று.

43. மிகப் பிரியமாய்ச் செய்யத்தக்கது யாது?
துக்கிகளிடத்தில் இரக்கமும் சாதுக்களிடத்தில் நேசமும்.

44. பிராணன் கழுத்தில் வந்தபோதும் எவர்களுக்கு இரக்க முண்டாகாது?
மூர்க்கன், பகைவன், கர்வமுடையவன், செய்நன்றி கொன்றவன் என்னுமிவர்களுக்கு.

45. பூஜிக்கத் தக்கவன் எவன்?
நல்லொழுக்க முடையவன்.

46. எவன் தாழ்ந்து போகிறான்?
தீ யொழுக்க முடை யவன்.

47. இவ்வுலகை வென்றவன் எவன்?
சத்தியம், நீதி, பொறுமை என்னுங் குணமுடையவன்.

48. தேவர்களும் எவனை வணங்குகிறார்கள்?
இரக்க மிகுந்தவனை.

49. விவேகி எதற்கஞ்சவேண்டும்?
சம்சார காட்டிற்கு.

50. சீவர்கள் எவனுக்கு வசமாவர்?
சத்தியம், அடக்கம், இன்சொல் லுடையவனுக்கு.

51. நிற்கவேண்டியது எங்கே?
காணப்பட்டனவும், காணப்படாதனவுமாகிய இலாப முள்ள நீதிவழியில்.
52. குருடர் யார்?
செய்யத்தகாத காரியத்தைச் செய்கின்றவர்.
53. செவிடர் யார்?
நன்மையைக் கேளாதவர்.
54. ஊமை யார்?
சமயத்தில் இன்சொற் கூற அறியாதவர்.
55. தானம் யாது?
கைம்மாறு வேண்டாத கொடை.
56. நண்பர் யார்?
பாபத்தினின்றும் விலக்குகிறவர்.
57 ஆபரணம் யாது?
சீலம் (ஆசாரம்)
58. வாக்குக் கழகு யாது?
வாய்மையும் இன்சொல்லும்.
59. மின்னொளிபோல் சஞ்சலமானவை யாவை?
தீயோர் கூட்டமும் பெண்களும்.
60. கலியிலுங் குல சீலங்களில் நழுவாதவர் யாவர்?
சத் புருஷர்கள்.
61. சிந்தாமணி போல் அடைதற் கரியவை யாவை?
நால்வகை மங்களங்கள்.
62. அம் மங்களங்கள் யாவை?

இன்சொல்லோடு கொடுத்தல், கர்வமின்றிய ஞானம், பொறுமையோடு சூரத்தனம், கொடையோடுங் கூடின பொருளுடைமை என்னு மின்னான்கும்.

63. துக்கிக்கத்தக்கது யாது?
உலோபமுடைமை. (பேராசை)

64. செல்வமுள்ள காலத்தில் புகழத்தக்கது யாது?
உதார முடைமை.

65. கற்றோரால் பூஜிக்கத் தக்கவன் யாவன்;
இயல்பாக எப்போதும் வணக்கமுள்ளவன்.

66. குலதாமரைக்குச் சூரியன் யாது?
குணசம்பத்துள்ள போதும் வணக்க முடைமை.

67. இவ்வுலகம் எவனுக்கு வசமாகும்?
இனிய நல்ல மொழியையும் முதன்மையாகக் கொண்ட தன் கன்மானுஷ்டானத்தையு முடையவனுக்கு.

68. கற்றவர் மனதைக் கவர்பவை யாவை?
நல்ல கவிபாடுதலும் ஞானமுள்ள பெண்ணும்.

69. ஆபத்து எவனைத் தொடராது?
பெரியோர் சொற்படி எவன் நடப்பானோ கண் முதலிய பொறிகளை எவன் அடக்குவானோ அவனை.

70. இலக்ஷுமி எவனை விரும்புவாள்?
சோம்பலில்லாத சித்தத்தையும் நீதி நடையையும் உடையவனை.

71. இலக்ஷுமி எவனை விரைவாக விடுவாள்?
அந்தணர், பெரியோர் இவர்களை நிந்திப்பவனையும், சோம்பலுள்ளவனையும்.

72. எங்கே வாசஞ் செய்யவேண்டும்?
சாதுக்களருகில் அல்லது காசியில்.

73. தள்ளவேண்டிய தேசம் எது?
கீழ்மக்களுள்ளதும் உலோபி அரசருள்ளதுமாகிய தேசம்.

74. எதனால் புருடன் துன்பமடையான்?
வணக்கமுடைய மனைவியாலும் தைரியமாகிய சம்பத்தாலும்.

75. எவன் துக்கிக்கத் தக்கவன்?
பொருளுள்ள போதுங் கொடையில்லாதவன்.

76. தாழ்மைக்குக் காரணம் யாது?
கீழ் மக்களிடம் இரப்பது.

77. எவன் இராமனை விடச் சூரன்?
காமன் கணைகளா லடிக்கப்பட்டுச் சலிக்காதவன்.

78. இரவும் பகலு நினைக்கத்தக்கது யாது?
ஈசனடிகளே ஸம்சாரமன்று.

79. கண்படைத்துங் குருடர் யாவர்?
நாஸ்திகம் பேசும் மாந்தர்கள்,

80. மூடவன் யார்?
மூப்பு வந்தபோது தீர்த்தயாத்திரை செய்கிறவன்.

81. எது முக்கியமான தீர்த்தம்?
சித்த மலத்தை நீக்குவது.

82. புருஷர்களால் பேசத்தக்கது யாது?
ஹரிநாமம் உலகவார்த்தை யன்று.

83 புத்திமானல் பேசத் தகாதது எது?
பொய்யும் பிறர் குற்றமும்.

84. மனிதரால் சம்பாதிக்கத் தக்கவை யாவை?
கல்வி, செல்வம், பலம், கீர்த்தி, புண்ணியம் என்னுவை.

85. எல்லா நற்குணங்களையு மழிப்பது யாது?
உலோபம்.

86. பகையாது?
காமம்.

87 தள்ளத்தக்க சபை எது?
வயோதிக அமைச்சரில்லாத சபை.

88. எதில் மனிதன் கவனமாயிருக்கவேண்டும்?
இராசசேவையில்

89. பிராணனினும் பிரியம் யாவை?
குலதருமமும் சாதுக்கள் சேர்க்கையும்.

90. காக்கவேண்டியவை யாவை?
கீர்த்தி, கற்பு, தன்மதி என்னுமிவை.

91. உலகில் கற்பகக் கொடியாது?
நன் மாணக்கனுக்குப் புகட்டிய கல்வி.

92. அழியாத வடலால விருக்ஷம் யாது?
விதிப்படி நல்லவர்களுக்குக் கொடுத்த தானம்.

93. அனைவருக்கும் ஆயுதம் யாது?
பொருந்தும்படிக் கூறும் யுக்தி.

94. அனைவருக்கும் மாதா யார்?
பசு. (மிகுதியாக பால்கொடுக்கும் பசு காமதேனு)

95. சைனியம் யாது?
தைரியம்.

96. எமன் யாது?
ஆய்ந்தோய்ந்து பாராமை.
97. விஷம் யாண்டுள்ளது?
தீயோரிடம்.
98. மனிதருக்குத் தீட்டு யாது?
கடன்.
99. பயமின்மை யாது?
ஆசையின்றி யிருத்தல்.
100. பயம் யாது?
அனைவருக்குஞ் செல்வம்.
101. கிடைத்தற்கரிது யாது?
ஹரிபக்தி.
102. பாபச்செய்கை யாது?
பிராணிகளை வருத்துதல்.
103. பகவானுக்குப் பிரியமானவன் எவன்?
தன்னால் ஒரு பிராணி பயப்படாமலும் ஒரு பிராணியால் தான் பயப்படாமலு மிருப்பவன்.
104. எதனால் சித்தியுண்டாம்?
தபஸால்.
105. தபஸ் யாது?
மனம்பொறி என்பவற்றின் ஒருமைப்பாடும், ஆலோசனையும்
106. இத் தவத்துக்குக் காரணம் யாது?
கிருச்சிர சாந்திராயண முதலிய விரதங்கள்.
107. அறிவு யெங்கே யுள்ளது?
அந்தணரிடம்.
108. அந்தணர்க் கறிவெதனாலுண்டானது?

பெரியோர் சேவையால்.

109. பெரியோர் யார்?

தருமத்தின் உண்மையுணர்ந்தோர்

110. பிறரால் நன்குமதிக்கப்பட்டவனுக்கு மரணத்தினும் அதிகம் யாது?

நிந்தை (அகீர்த்தி)

111. இவ்வுலகில் சுகியார்?

செல்வ முடையோன்.

112. செல்வம் யாது?

விரும்பியதை எல்லாந் தருவது.

113. எல்லா இன்பத்துக்கும் விதையாது?

புண்ணியம்.

114. துன்பமெல்லா மெதனாலுண்டாகின்றன?

பாபத்தால்.

115. ஐசுவரியம் எவனுக்குண்டாகும்?

பக்தியோடு சங்கரனை ஆராதிப்பவனுக்கு.

116. எவன் மேன்மைப்படுகின்றான்?

அடக்கமுடையவன்.

117. எவன் கெட்டுப்போகிறான்?

கருவமுடையவன்.

118. எவன் நம்பத் தகாதவன்?

அடிக்கடி பொய் பேசுகிறவன்.

119. பாபமில்லாத பொய் எது?

தருமத்தைக் காக்கும் பொருட்டுச் சொல்லும் பொய்.

120. தருமம் யாது?

குலாசாரமுடைய பெரியோர் அனுஷ்டிப்பது.

96. எமன் யாது?
ஆய்ந்தோய்ந்து பாராமை.

97. விஷம் யாண்டுள்ளது?
தீயோரிடம்.

98. மனிதருக்குத் தீட்டு யாது?
கடன்.

99. பயமின்மை யாது?
ஆசையின்றி யிருத்தல்.

100. பயம் யாது?
அனைவருக்குஞ் செல்வம்.

101. கிடைத்தற்கரிது யாது?
ஹரிபக்தி.

102. பாபச்செய்கை யாது?
பிராணிகளை வருத்துதல்.

103. பகவானுக்குப் பிரியமானவன் எவன்?
தன்னால் ஒரு பிராணி பயப்படாமலும் ஒரு பிராணியால் தான் பயப்படாமலு மிருப்பவன்.

104. எதனால் சித்தியுண்டாம்?
தபஸால்.

105. தபஸ் யாது?
மனம்பொறி என்பவற்றின் ஒருமைப்பாடும், ஆலோசனையும்

106. இத் தவத்துக்குக் காரணம் யாது?
கிருச்சிர சாந்திராயண முதலிய விரதங்கள்.

107. அறிவு யெங்கே யுள்ளது?
அந்தணரிடம்.

108. அந்தணர்க் கறிவெதனாலுண்டானது?

பெரியோர் சேவையால்.

109. பெரியோர் யார்?
தருமத்தின் உண்மையுணர்ந்தோர்

110. பிறரால் நன்குமதிக்கப்பட்டவனுக்கு மரணத்தினும் அதிகம் யாது?
நிந்தை (அகீர்த்தி)

111. இவ்வுலகில் சுகியார்?
செல்வ முடையோன்.

112. செல்வம் யாது?
விரும்பியதை எல்லாந் தருவது.

113. எல்லா இன்பத்துக்கும் விதையாது?
புண்ணியம்.

114. துன்பமெல்லா மெதனுலுண்டாகின்றன?
பாபத்தால்.

115. ஐசுவரியம் எவனுக்குண்டாகும்?
பக்தியோடு சங்கரனை ஆராதிப்பவனுக்கு.

116. எவன் மேன்மைப்படுகின்றான்?
அடக்கமுடையவன்.

117. எவன் கெட்டுப்போகிறான்?
கருவமுடையவன்.

118. எவன் நம்பத் தகாதவன்?
அடிக்கடி பொய் பேசுகிறவன்.

119. பாபமில்லாத பொய் எது?
தருமத்தைக் காக்கும் பொருட்டுச் சொல்லும் பொய்.

120. தருமம் யாது?
குலாசாரமுடைய பெரியோர் அனுஷ்டிப்பது.

96. எமன் யாது?
ஆய்ந்தோய்ந்து பாராமை.
97. விஷம் யாண்டுள்ளது?
தீயோரிடம்.
98. மனிதருக்குத் தீட்டு யாது?
கடன்.
99. பயமின்மை யாது?
ஆசையின்றி யிருத்தல்.
100. பயம் யாது?
அனைவருக்குஞ் செல்வம்.
101. கிடைத்தற்கரிது யாது?
ஹரிபக்தி.
102. பாபச்செய்கை யாது?
பிராணிகளை வருத்துதல்.
103. பகவானுக்குப் பிரியமானவன் எவன்?
தன்னால் ஒரு பிராணி பயப்படாமலும் ஒரு பிராணியால் தான் பயப்படாமலு மிருப்பவன்.
104. எதனால் சித்தியுண்டாம்?
தபஸால்.
105. தபஸ் யாது?
மனம்பொறி என்பவற்றின் ஒருமைப்பாடும், ஆலோசனையும்
106. இத் தவத்துக்குக் காரணம் யாது?
கிருச்சிர சாந்திராயண முதலிய விரதங்கள்.
107. அறிவு யெங்கே யுள்ளது?
அந்தணரிடம்.
108. அந்தணர்க் கறிவெதனாலுண்டானது?

பெரியோர் சேவையால்.

109. பெரியோர் யார்?

தருமத்தின் உண்மையுணர்ந்தோர்

110. பிறரால் நன்குமதிக்கப்பட்டவனுக்கு மரணத்தினும் அதிகம் யாது?

நிந்தை (அகீர்த்தி)

111. இவ்வுலகில் சுகியார்?

செல்வ முடையோன்.

112. செல்வம் யாது?

விரும்பியதை எல்லாந் தருவது.

113. எல்லா இன்பத்துக்கும் விதையாது?

புண்ணியம்.

114. துன்பமெல்லா மெதனுலுண்டாகின்றன?

பாபத்தால்.

115. ஐசுவரியம் எவனுக்குண்டாகும்?

பக்தியோடு சங்கரனை ஆராதிப்பவனுக்கு.

116. எவன் மேன்மைப்படுகின்றான்?

அடக்கமுடையவன்.

117. எவன் கெட்டுப்போகிறான்?

கருவமுடையவன்.

118. எவன் நம்பத் தகாதவன்?

அடிக்கடி பொய் பேசுகிறவன்.

119. பாபமில்லாத பொய் எது?

தருமத்தைக் காக்கும் பொருட்டுச் சொல்லும் பொய்.

120. தருமம் யாது?

குலாசாரமுடைய பெரியோர் அனுஷ்டிப்பது.

121. சாதுவிற்குப் பலம் யாது?
தெய்வம்.
122. சாது யார்?
எப்போதுஞ் சந்தோஷமுடையவன்.
123. தெய்வம் யாது?
நல்வினை.
124. நல்வினை யுடையவன் எவன்?
எல்லோராலும் புகழப்படுவோன்.
125. இல்லறத்தானுக்குத் துணையார்?
மனைவி.
126. இல்லறலத்தான் யார்?
யாகஞ் செய்கிறவன்.
127. யாகம் யாது?
மனிதருக்கு மேன்மையைத் தருவதாய் வேதத்தில் வித்தது.
128. எவன் கிரியை பயனளிக்கும்?
ஆசாரமும் நன்னடக்கையுமுடையவன் கிரியை.
129. எவன் நன்னடக்கை யுடையவன்?
வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டவன்.
130. இருந்து பிறந்தவன் எவன்?
தன் தருமத்தினின்று நழுவினவன்.
131. அன்னியன் யார்?
சந்நியாசி.
132. பூஜிக்கத் தக்கவன் யார்?
சாதுவான பண்டிதன்.
133. வணங்கத் தக்கவன் யார்?
கொடையாளி.

134. கொடையாளி யார்?
யாசகருக்குத் திருத்தியை யுண்டாக்குகிறவன்.

135. உடம் பெடுத்தவருக்குப் பாக்கியம் யாது?
நோயற்ற வாழ்க்கை.

136. பயன் பெறுவோன் எவன்?
உழவாளி.

137. பாபம் எவனுக்கில்லை?
ஜெபஞ் செய்கிறவனுக்கு.

138. நிறைந்தவன் எவன்?
வெகு புத்திசாமர்த்தியமுடையவன்.

139. மனிதர் செய்தற்கரிய காரியம் யாது?
எப்போதும் மனதை அடக்கியிருப்பது.

140. பிரம்மசாரி எவன்?
சுக்கிலத்தை நழுவவிடாது நிறுத்தினவன்.

141. பரதேவதை எவள்?
சித்ஸக்தி யென்னும் பிரம்மவித்தை.

142. உலகைத் தாங்குகிறவன் யார்?
சூரியன்.

143. சகல பிராணிகளின் சீவன காரணம் யாது?
காலமழை.

144. எவன் சமர்த்தன்?
பயந்தவனைக் காப்பவன்.

145. காப்பவன் யார்?
சத்குரு.

146. ஜகத்குரு யார்?

சிவபெருமான்.

147. ஞானம் யாரிடமிருந்து கிடைக்கின்றது?
சம்புவினிடமிருந்து.

148. மோக்ஷ காரணம் யாது?
முகுந்த பக்தி.

149. முகுந்தன் யார்?
அஞ்ஞானக் கடலினின்றுங் கரையேற்றுகிறவன்.

150. அஞ்ஞானம் யாது?
ஆன்மாவின் விளக்கமில்லாமை.

151. துன்பமில்லாதவன் எவன்?
குரோதமில்லாதவன்.

152. சுகம் யாது?
சந்தோஷம்.

153. இராஜா யார்?
மனிதரை இன்புறுத்துகிறவன்.

154. நாய் யார்?
இழிந்தோரைச் சேவிக்கிறவன்.

155. மாயாவி யார்?
பரமேசுவரன்.

156. இந்திரஜாலம் யாது?
இவ்வுலகம்.

157. கனவின் சமம் யாது?
இந்த நனவின் வியவகாரம்.

158. சத்தியம் யாது?
பரப்பிரமம்.

159. மித்தையாது?
ஞானத்தால் அழிவது.
160. துச்சம் யாது?
முக்காலமுமில்லாத முயற்கொம்பு முதலியன.
161. அநிர்வசனீயம் யாது? (சொல்லொணாதது)
மாயை.
162. கற்பிதம் யாது?
இரண்டிரண்டான துவைதம்.
163. முக்காலத்து முள்ளதெது?
இரண்டாவதில்லாத அத்வைதம்.
164. எதனால் அஞ்ஞானம் வந்தது?
அது ஒன்றாலும் வந்ததன்று அநாதியாயுள்ளது.
165. உடம்பைக் காப்பது யாது?
பிராரத்த கன்மம்.
166. அந்தணரால் உபாசிக்கத்தக்க தெய்வம் யாவை?
காயத்திரீ, சூரியன், வன்னி, இவற்றில் விளங்கும் சிவம்.
167 காயத்திரீ, சூரியன், வன்னி, சிவம், இவற்றிலுள்ளது யாது?
அந்த பிர்ம்மமாகிய தத்துவம்.
168. கண்கண்ட தெய்வம் யார்?
தாயார்.
169. வழிபாட்டிற் குரிய குரு யார்?
தகப்பனார்.
170. சகல தேவதா சொரூபமானவர் யார்?
தத்துவக்ஞானியும், ஞான கருமங்களுடைய அந்தணரும்.

171. குலநாச காரணம் யாது?
சாதுக்களுக்குச் செய்யும் மனவருத்தம்.

172. எவர் சொல் வீணாகாது?
சத்தியம், மௌனம், மனவடக்கம் என்னும் விரதமுடையவர் சொல்.

173. மறு பிறப்பு யாது?
விஷய சங்கம்.

174. நீக்கமுடியாதது யாது?
மரணம்.

175. அடி யெங்கே வைக்கவேண்டும்?
பார்வைக்குச் சுத்தமான இடத்தில்.

176. அன்னதானத்துக்குப் பாத்திரம் யார்?
பசித்தவர்.

177. பகவன் யார்?
சங்கர நாராயண சொரூபமான மகேசுவரர்.

178. பகவத் பக்தியின் பயன் யாது?
அந்த அந்தவுலக சொரூப சாக்ஷாத்காரம்.

179. மோக்ஷம் யாது?
அவித்தையின் நாசம்.

180. சகல வேதங்களும் பிறக்குமிட மெங்கே?
ஓம் என்னும் பிரணவம்.

வினவிடை மணிமாலை

முற்றிற்று.

ஓம்.

தத் ஸத்.